சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.5) துறை

அரசாணை (நிலை) எண்.129

69638

நாள்: 14.09.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.5) துறை, நாள் 07.05.2013.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.26279/2013/இ.2, நாள் 10.04.2013.

---

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.10.2010 நாளன்று 3 ஆண்டுகள் பணி முடித்து உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களின் பணியிடங்களை சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 09.04.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ், கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள்.

- ❖ ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவுப் பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. கிராமங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள தற்போது 9,896 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பகுதிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது.

- ❖ இதனைக் கருத்திற்கொண்டு, மக்கள் தொகை 3,000–க்கும் கீழ் உள்ள 8,469 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக ஒன்று வீதமும், 3,001 முதல் 10,000 வரை உள்ள 3908 கிராம ஊராட்சிகளில், கிராம ஊராட்சிக்கு கூடுதலாக இரண்டு வீதமும், 10,000–க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 147 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக மூன்று வீதமும், ஆக

மொத்தம் 16,726 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது.

❖ இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுபவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2,000 ரூபாயும், அகவிலைப்படியாக 40 (அரையாண்டு) ரூபாயும் வழங்கப்படும். இதன் காரணமாக, ஒரு பணியிடத்திற்கு தோராயமாக 25 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் 16,726 துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு 41 கோடியே 81 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும். ”

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், கிராமங்களில் தூய்மையைப் பேண, துப்புரவுப் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். தற்போது துப்புரவு பணியை மேற்கொள்ள 9896 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே இத்துறையில் உள்ளனர். ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவு பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. எனவே, இப்பகுதிகளில் துப்புரவு பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது. பெரும்பாலான கிராம பஞ்சாயத்துகளில் துப்புரவு பணியாளர்கள் தெருக்கள் மற்றும் சந்துகளை தினமும் சுத்தம் செய்து கழிவு கூளங்களை சேகரித்து பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துகின்றனர். கிராம மக்களின் வாழ்க்கை தரம் உயரும் அளவில், கிராம சுகாதாரத்தை மேம்படுத்த மக்கள் தொகைக்கேற்ப, மேலும் பணியாளர்களை நியமிக்க அவசியமாகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிக்கையின்படி, பணியாளர்களை நியமிக்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4.மேற்கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

❖ மக்கள் தொகை 3,000–க்கும் கீழ் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு கூடுதலாக 1 பணியிடமும்,

❖ 3001 முதல் 10,000 வரை உள்ள ஊராட்சிகளுக்கு கூடுதலாக 2 பணியிடங்களும்,

❖ 10,000–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளுக்கு கூடுதலாக 3 பணியிடங்கள் என மொத்தம் 16,726 துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மேற்படி துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதம் தலா ரூ.2,000/– தொகுப்பூதியம் (தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர் பெறும் நிலை) + ரூ.40/– அக விலைப்படி (அரையாண்டு) ஊதியத்தில் என மொத்தம் 16,726 துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அரசாணை (1ப) எண்.385, நிதித்துறை, நாள் 01.10.2010–ன்படி, மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இப்பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.1,300–3000 + ரூ. 300 தர ஊதியம் அளிக்கப்படும்.

5. மேற்கண்ட ஆணைகளால், கிராம ஊராட்சிகளுக்கு ஏற்படும் செலவுகளை, அந்தந்த கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என ஆணையிடப்படுகிறது.

6. கிராம ஊராட்சித் தலைவர்கள், அந்தந்த கிராம ஊராட்சி மக்கள் தொகையின் அடிப்படையில், துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்துகொள்வதற்கான வழிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

7. இந்த அரசாணையின் படிகளை அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் உடனே அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இந்த அரசாணை 20.07.2013 நாளிட்ட நிதித்துறையின் அ.சா.எண். 183/ JS (AR)/2013ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், (சென்னை நீங்கலாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதி கணக்குகள் துறை, குறளகம், சென்னை–108.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை–15.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் (சென்னை நீங்கலாக)
(மாவட்ட ஆட்சியர் மூலம்)

நகல்.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் ) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித் (ஊ.வ) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சென்னை – 9
உதிரி/இருப்புக்கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
14/9/13